முத்தரசி
கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME : 1 ISSUE : 1 AUG- 2023
2023

# இலக்கியத்தில் கள்ளர் இனமும் குலதெய்வவழிபாடும்

திருமதி ந. அனிதா
வரலாற்றுத்துறை, உதவிப்பேராசிரியை,
வே.வ வன்னியப் பெருமாள் பெண்கள் கல்லூரி,விருதுநகர்.

பண்டைய தமிழரில் போர்மரபினராகிய கள்ளர், மறவர், அகமுடையார் என்ற மூன்று சமூகங்களும் முக்குலத்தோர் அல்லது தேவர்கள் என்ற பொது அடையாளத்தின் கீழ் அழைக்கப்படுகின்றனர். இவ்வாறு இவர்கள் மூவரும் ஓரினமாக அறியப்பட்டாலும் இதில் கள்ளர்கள் ஒரு தனித்த சமூகமாகவே வாழ்கின்றனர். இவ்வகை கள்ளர் குலத்தவர்கள் எவ்வினத்தை சேர்ந்தவர்கள் என்பதை இலக்கியம் வழியாக அறியமுடிகிறது.

சங்க நாளிலே திருவேங்கடத்தை ஆண்ட புல்லி என்னும் அரசன் கள்வர் கோமான் என்று கூறப்படுகின்றான். அவன் வீரத்திலும், வள்ளன்மையிலும் மிக மேம்பட்டவனென்று தெரிகிறது. பொய்யடிமையில்லாத புலவராகிய சங்கத்துச் சான்றோருள், கபிலர், பாணர், நக்கீரர். கல்லாடனார், மாமூலனார் போன்றோர் பல பாட்டுக்களால் அவனைப் பாடியிருப்பதனால் அவனது பெருமையை நன்கு புலப்படுத்துகிறது.

“கழல் புணை திருந்தடிக்கள்வர் கோமான்
மழபுலம் வணக்கிய மாவண் புல்லி
விழவுடை விழக்கு சீர் வேங்கடம்”.

எனவும்

“பொய்யா நல்லிசை மாவண் புல்லி
புல்லி - வியன்றவை நன்னாட்டு வேங்கடம்”
“மா அல்யானை மறப்போர் புல்லி
காப்புடை நெடுவரை வேங்கடம்”

என அகநானூற்றிலும்,

“கடுமான் புல்லி கடிந்தோரோ”

என நற்றிணையில் மாமூலனார் கூறுகின்றார்.

“கள்வர் பெருமகன் - தென்னை” என்று அகநானுற்றில் மதுரைக் கணக்காயனார் ஒரு பாண்டியனைக் குறித்துள்ளார். இது சங்கநாளிலே ஆயிரத் தெண்ணூறு ஆண்டுகளின் முன்பு “கள்வர்” என்ற பெயர் வழக்கில் இருந்தது எனவும் கள்வர் குலத்தவர் அரசராயிருந்தரென்பதும் தெரிகிறது. கள்ளர் வகுப்பினரைப் பல்லவர் வழியினரென்பதற்கும் பல பொருத்தங்களுள்ளன. பல்லவர் தொண்டையர் என்னும் பெயர்கள் ஒரே வகுப்பினரை குறிப்பனவாகும். திருத்தொண்டர்களில் ஒருவராகிய ஐயடிகள் காடவர்கோன் நாயனாரை

“ பத்தி கடல் ஐயடிகளாகின்ற நம்பல்லவனே” என்று திருத்தொண்டர் திருவந்தாதியும்.

“கன்னிமதில் சூழ்காஞ்சிக் காடவ ரையடிகளார்” என்று பெரியபுராணமும் சுழற்சிங்க நாயனாரை.

“ கடல் சூழ்ந்த உலகெலாங் காக்கின்ற பெருமான்,

SAMPLE

முத்தரசி
கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
2023
VOLUME : 1 ISSUE : 1 AUG- 2023

காடவர்கோன் கழற் சிங்கன்”

என்று திருத்தொண்டத் தொகையும்

“ பல்லவகுலத்து வந்தார்”

என்று பெரியபுராணமும் குறிக்கின்றது.

இவ்வாறாக கள்ளர் வேங்கட மரபினர், களப்படை மரபினர், களப்பிரர் சோழர் குலத்தவர், தொண்டை மண்டத்துக் குறும்பர்கள், பல்லவர்கள் வழி தோன்றல் என்று பல கருத்துக்கள் சான்றுகளுடன் கூறப்பட்டாலும், கள்ளர் என்ற அடையாளம் கொண்ட இனக்குழுக்கள் சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பே தமிழகத்தின் வடக்குப் பகுதிகளில் வாழ்ந்து வந்தனர் என்பதனையும், அவர்கள் வேற்று நாட்டாரின் தொடர் படையெடுப்பின் காரணமாகவும், அப்பகுதியில் ஏற்பட்ட பஞ்சம் மற்றும் வெள்ளம் போன்ற இயற்கை நிகழ்வுகள் காரணமாகவும் அப்பகுதியிலிருந்து வெளியேறி தெற்கு நோக்கி வந்து சோழ, பாண்டிய மண்டலங்களில் பரவி குடியமர்ந்தனர் என்பதைனையும் பல்வேறு அறிஞர்களின் கூற்றுப்படி உறுதி செய்ய முடிகின்றது.

**குலதெய்வ வழிபாடுகள்**

தமிழ்ச் சமூகத்தின் தொன்மையான சமய மரபுகளையும் வழிபாடுகளையும் பிறமலை கள்ளர்களது வழிபாட்டு மரபுகளின்மூலம் புரிந்து கொள்ள இயலும், ஏனெனில் தமிழ்ச் சமூகத்தின் பூர்வீக வழிபாட்டுச் சமய மரபுகளான இயற்கை வழிபாடு, முன்னோர் வழிபாடு தாய் தெய்வ வழிபாடு, சண்டையில் இறந்துபோன வீரர்களை வழிபடுதல் (நடுகல்) போன்ற அடிப்படை வழிபாட்டு மரபுகளை உள்ளடக்கி உள்ளனர்.

**குலதெய்வங்கள்:**

ஒரே குல தெய்வங்களை வணங்குபவர்கள் ஒரே பங்காளிகளாகவும் கருதப்படுகின்றனர். இக்குலதெய்வங்களை வணங்குவதன் மூலம் தங்கள் குலம் பல்கிப் பெருகுவதாக நம்புகின்றனர். பெரும்பாலும் முகம் தெரியாத முன்னோர்களும் அவர்களால் நம்பப்பட்ட சக்திகளுமே குலதெய்வ வடிவங்களைப் பெறுகின்றன. அவ்வகையில் பிறமலைக் கள்ளர்கள் பலவகை ஆண் தெய்வங்களையும்,பெண் தெய்வங்களையும் தங்கள் குல தெய்வங்களாக வணங்குகின்றனர்.

**ஆண் தெய்வங்கள்:**

கழுவநாதன்,பொன்னாங்கன், கடசாரி நல்ல குடும்பன், புண்ணூர் அய்யனார், பூங்கொடி அய்யனார்,ஊர்காளை அய்யனார், கல்யாண கருப்பு, தென்கரை கருப்பு, சோனைக் கருப்பு, பெத்தனசாமி, வாலகுருநாதன்,மாயன் , ஆதிசிவன், பெருமாள், மலைராமன், பதினெட்டாம்படி கருப்பு.

**பெண் தெய்வங்கள்:**

பேச்சியம்மன் ஒச்சாண்டம்மன், சுந்தரவள்ளியம்மன், காத்தாண்டம்மன், அங்காளம்மன், சின்னக்காளி அம்மன், காமாட்சியம்மன், கண்ணாத்தாள், ஒய்யண்டான், நல்லதங்காள்.

இவ்வாறு உட்பிரிவுகள் தங்களுக்கென தனிப்பட்ட குலதெய்வங்களை கொண்டிருந்தாலும் குல தெய்வ வழிபாட்டில் பின்பற்றப்படுகின்ற சில பொதுவான நடைமுறைகளும் உள்ளன.

ஒவ்வொரு குலதெய்வக் கோயிலும் ஒரு குறிப்பிட்ட வம்சாவளிக்குப் பாத்தியப்பட்டதாக உள்ளது. பெரும்பலும் ஒரே ஆணின் மரபில் வந்த வம்சத்தவர்கள் அதனைக் குலதெய்வமாக வணங்குகின்றனர். ஒவ்வொரு கோயிலும், ஒரு குறிப்பிட்ட சாமியின் பெயரால் அமைந்திருந்ததாலும் பல துணை தெய்வங்களையும் உள்ளக்கியே உள்ளன. துணை

SAMPLE

தெய்வங்கள் பரிவார தெய்வங்கள் என படுகின்றன. எல்லாக் கோயிலின் கருவரையிலும் அய்யன் சாமியே இடம் பெற்றுள்ளது. இதுவே மூல தெய்வமாக கருதப்படுகிறது.

**கோயிலின் நிர்வாகம்**

ஒவ்வொரு குல தெய்வக் கோயிலிலும் தேவர், பூசாரிகள், கோடாங்கிகள் என்ற நிர்வாகிகள் உள்ளனர். இவர்களே கோயில் சார்ந்த எல்லா நிகழ்வுகளையும் நடத்துகின்றனர்.

- ஓவ்வொரு கோயிலிலும் எத்தனை வம்சாவளிகள் இடம் பெற்றுள்ளனவோ அவை ஒவ்வொன்றிலிருந்தும் ஒருவர் தேவராகப் பொறுப்பு வகிக்கிறார். அப்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் ஒருவர் பெரிய தேவராவார். இவரே கோயில் நிர்வாக தலைவர் ஆவார்.
- சாமிகளுக்கு பூசை செய்பவர்கள் பூசாரி எனப்பவர் இக் குலதெய்வக் கோயில்களில் பெரும்பாலும் பிறமலைக் கள்ளர்களே பூசாரிகளாக உள்ளனர். பெரிய பூசாரி நீளமாகத் தொங்கும் வாலக்குகளுக்கன் அணிந்திருப்பார். சின்ன பூசாரி சிவப்புக்கல் பதித்த ஓட்டுக் கடுக்கன் அணிந்திருப்பார்.
- கோடாங்கி என்பவர் சாமி அவர் மீது இறங்கி ஆடுபவராகவும்,அருள்வாக்கு சொல்பவராகம் கூறப்படுகிறது. கோடாங்கி இவரின் அருள்வாக்கு பெற்றே கோவில் திருவிழாக்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

**குல தெய்வ வழிபாட்டு முறைகள்:**

பெட்டி தூக்குதல், சக்தி கிடாய் வெட்டுதல், பள்ளயம் பிரித்துப் பூசை கட்டுதல் ஆகிய மூன்று நடைமுறைகளே எல்லாக் குலதெய்வக் கோயில்களுக்கும் அடிப்படை வழிபாட்டு நடைமுறைகளாக உள்ளன.

**பெட்டிதூக்குதல்**

நம் முன்னோர்களின் ஞாபகார்த்தமாக அவர்கள் பயன் படுத்திய பொருட்களை பெட்டியில் பாதுகாத்து அதை வருடத்திற்கு ஒரு முறை எடுத்து, அதற்குரிய மரியாதையை செலுத்தி வழிபடுவதே பெட்டி தூக்குதல் எனப்படும். கள்ளர்களது திருவிழாக்களில் பெட்டி தூக்குதல் பிரதான நிகழ்வாகக் கருதப்படுகிறது.

**கிடாய் வெட்டுதல்:**

ஒரு கிடாயை வெட்டி இரத்தத்தைச் சிந்துவதின் மூலம் தெய்வத்தின் சக்தி அந்த ரத்தம் சிந்தப்பட்ட இடத்தில் நிலைத்து விடுவதாக நம்புகின்றனர். அதாவது ஒரு இடத்தில் தெய்வனம் நிலை பெற வேண்டுமென்றால் உயிர்பலி மூலமாகத் தான், நிலை பெறச் செய்ய இயலும் என நம்புகின்றனர்.

**பள்ளயம் பிரித்துப் பூசை கட்டுதல்:**

மொச்சைப்பயிர் மற்றும் இதர பயிர்களைக் கம்புமாவில் கலந்து கரும்பு, மா, சக்கரை, வாழைப்பழம் போன்றவற்றை ஒரு இலையில் சாமிகளுக்கு முன் வைத்துப் பூஜை செய்வதையே பள்ளயம் வைத்தல் என்கின்றனர். அந்த

SAMPLE

காலத்தில் கோயில்கள் பெரும்பாலும் கட்டங்கள் இல்லாமல் திறந்தவெளியிலும், சாமிகளுக்கு அடையாளமாக கல் தூண்டுகள் மட்டுமே இருந்தன. எனவே படையல்கள் வைத்தால் காற்று அடித்து அவற்றை கவிழ்த்துவரும். எனவே பள்ளம் தோண்டி அவற்றில் படையள்களை வைத்தனர். இவ்வாறு பள்ளங்களைப் பறித்து வைக்கின்ற படையல்கள் பள்ளயங்கள் எனப்பட்டன. இவ்வாறு பள்ளம் பிரித்து, பெரிய பூசாரி வாயில் துணிகட்டி சின்ன கருப்பசாமி, ராக்கம்மாள் நீங்களாக எல்லாத் தெய்வங்களுக்கும் பூசை கட்டுவார், அதுபோல் சின்னச்சாமி கருப்புக்கு மட்டும் சின்னபூசாரி பூசை கட்டுவார்.

**மாசிபச்சைத் திருவிழா**

குல தெய்வ வழிபாட்டிற்கு மிக சிறந்த நாளாக கருதப்படுவது இந்த மாசி பச்சை திருவிழாவாகும், மாசிமாதம் வரும் அமாவாசை தினத்திற்கு 15 நாட்களுக்குமுன்பு மதயானை மந்தையில் பூசாரிகள், கோடாங்கிகள் கூடுவர், இதனை15 நாள் கும்பல் என்கின்றனர். அப்பொழுது கொட்டு கொட்டி சாமி இறக்குவர் சாமி இறங்கி ஆடும் பொழுது அய்யன் பிடிக்கியைப் பார்த்து “ அய்யனே உனக்கு தழுகை பச்சைப் போடலாமா? பூசை கட்டலாமா? உத்தரவு கொடு “ எனக் கேட்பார். அப்பொழுது அய்யன் பிடிக்கி, சாமி இறங்கி “ மண்ணுலகாத்தேவன் மக்கா, ஆம்பளமக்கா,பொம்பள மக்கா, அக்கா மகன் தடியத்தேவர் எனக்குப் பச்சை போடுங்கப்பா பவள விழா நடத்துங்கப்பா என உத்தரவு கொடுப்பார் அதன் பின்பு தான் விழாவிற்கு ஏற்பாடு செய்யத்துவங்குவர் மாசி அம்மாவாசைக்கு முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் 6 பங்காளிகளும், பூசாரிகளும் கோடாங்கிகளும், இவர்களுக்கான பொது கிராம மந்தையில் கூடுவர் ஒவ்வொரு கோயிலுக்கும் உரிய பெட்டிகளான பொன்னாங்கன் சாமி பெட்டி, சின்னச்சாமி ராக்கம்மாள் பெட்டி, பாப்பார கருப்பசாமி பெட்டிகள் என இவ்வொரு குலதெய்வத்திற்கும் சில பெட்டிகள் உள்ளன. பெரிய பூசாரி, சின்ன பூசாரி, கோடாங்கி என பரம்பரை பெட்டி தூக்குபவர்கள் அவர்களுக்குரிய பெட்டியை அவரவர் கிராமங்களில் இருந்து தூக்கி கொண்டு கொட்டுமேளம் முழுங்க ஊர்கோலமாக குலதெய்வ கோயிலை நோக்கி வருவர். அதில் ஒச்சாண்டம்மன் பெட்டி மட்டும் நேரடியாக கோயிலுக்கு வராது அது தன் தாய் வீட்டுக்கு சென்று தாய்வீட்டுச் சீதனமாக சொளகு, முறம், போன்றவற்றுடன் கொட்டு மேளம் முழங்க தனியாகப் பெரியகோயிலுக்கு வந்து சேரும், பெட்டிகள் கோயிலுக்குள் வந்த உடன் சங்கு சேகண்டி முழங்க பூசை செய்வர்.

அதன் பின்பு இரவு முழுவதும் பக்தர்கள் சாரை சாரையாக வந்து சாமிகளுக்கு மாலை சாத்தி, பழம், தேங்காய் மாற்றி எண்ணெய் ஊற்றி சாமிகளை வணங்கி விட்டுச் செல்வர்.

அதிகாலை 3 மணியளவில் பெரியபூசாரி எல்லாச் சாமிகளுக்கும் கம்பு மாவு கலந்து மொச்சை பயிர், கரும்பு சக்கரை, பழம், இளனி வைத்து தழுகை போடுவார், அதன் பின்பு பாப்பாரக் கருப்புசாமி, கோடாங்கியம் மாயாண்டிச் சாமி கோடாங்கியும் அய்யன் பிடிக்கியைத் தூக்கி கொண்டு அருகில் உள்ள கோயில் கிணற்றில் மூன்று முறை முக்கி தூக்கி வந்து கோயில் கருவறையில் இறக்கி விடுவர். பிறகு அய்யன் பிடிக்கிக்கு அருள் இறக்கி அவரைப் பார்த்து “ அய்யனே உன்ன பூசிக்கலாமா எனப் பெரிய பூசா கேட்பார். “ மண்ணுலகாத்தேவன் ஆம்பளமக்கா, பொம்பளமக்கா, அக்கா மகன் தடியா உங்க பூசையை நான் ஏத்துக்கிட்டேன். “ என அய்யன்பிடிக்கி உத்தரவு கொடுத்த பின்பு பெரிய பூசாரி துணியால் வாயை மூடிக்

SAMPLE

முத்தரசி
கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME : 1 ISSUE : 1 AUG- 2023
2023

கொண்டு பூச செய்வார் எல்லாத் தெய்வங்களுக்கும் பூசை செய்யப்பட்ட பின்பு கடைசியாக அய்யனுக்குச் சங்கு சேகண்டி முழங்க பூசை நடைபெறும், சின்னபூசாரி சின்னசாமி ராக்கம்மாளுக்கு மட்டும் பூசை கட்டுவார் அத்தோடு அன்றைய விழா நிறைவடையும்.

மறுநாள் அமாவாசை தினத்தன்று மாலை 7 மணியளவில் மறுபடியும் எல்லாச் சாமிகளுக்கும் பூசை நடத்தப்படும் பாரி வேட்டை பூசை எனப்படும் பூசைகள் முடிந்த பின்பு இண்டு சக்தி கிடாய்கள் வெட்டப்படும் மதயானை தேவர் ஒரு கிடாயும், தடியத்தேவன் ஒரு கிடாயும் கொண்டு வருவர் அதிலர் மதயானை கிடாயை அவரது மைத்துனரும், தடியன் கிடாயை அவரது தாய்மாமன் மதயானைத் தேவரும் வெட்டுவார். இவ்வாறு சக்தி கிடாய் வெட்டப்பட்ட பின்பு பெடடிகள் அனைத்தும் அதனதன் ( பெட்டி) வீட்டிற்கு எடுத்துச் செல்லப்படும் இத்தோடு மாசிபச்சைத் திருவிழா நிறைவு பெறும் .

**நடுகல், தெய்வங்கள்:**

சண்டையில் கொல்லப்பட்டவர்களை நடுகல் வைத்து தெய்வங்களாக வழிபடுவது தமிழர்களின் பூர்வீக சமய மரபாகும், பிறமலைக் கள்ளர் அவ்வகையில் நடுகல் தெய்வங்களைப் பட்டவன் தெய்வங்கள் அல்லது பட்டவன் கருப்புகள் என அழைக்கின்றனர்.

சாதாரணமாக இறந்து போனர்களை பட்டவன்களாக வழிபடுவதில்லை. ஏதாவது ஒரு மோதல் ஏற்பட்டு அதில் காயம்பட்டு இறந்தவர்கள் மட்டுமே பட்டவன்களாக வழிபடுகின்றனர். இவ்வாறு சண்டையில் இறந்து போனவர்களை அவர்கள் கொல்லப்பட்ட இடத்தில் ஒரு கல்தூண் வைத்து அல்லது அந்த கொலை சம்பவத்தை ஞாபகப்படுத்துகின்ற விதத்தில் சிலை அடித்து வைத்து வணங்குகின்றனர். அவர்கள் கொல்லப்பட்ட இடம் வெகு தொலைவில் இருந்து வழிபடுகின்றனர். பெரும்பாலும் கொல்லாப்பட்டவர்களின் நேரடி சந்ததியினரே அவர்களைத் தங்களது குடும்ப தெய்வங்களாக வணங்குகின்றனர். பிறமலைக் கள்ளர்கள் போர் மரபினராகையால் ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு வம்சாவளிகளிலும் இவ்வகை நடுகல் தெய்வங்கள் உள்ளன.

மாலிக்காபூர் படையெடுப்பு காலத்திலிருந்து நாயக்கர் காலம் வரையிலும், நாயக்கர்களின் வீழ்ச்சியிலிருந்து கும்பனியிர்கள் மதுரையை தங்களது முழுக்கட்டுப்பாட்டில் கொண்டு வந்த காலம் வரையிலும் தொடர்ந்து பல போர்கள் நடந்தன இதனை மக்கள் படைவெட்டுக்காலம் என்கின்றனர். இக்கால கட்டத்தில் மதுரையை தங்கள் அதிகாரத்தின் கீழ்கொண்டு வர முயன்ற அனைவரும் மதுரை நகரத்தைச் சுற்றியிருந்த கள்ளர்களுடனும் மோத வேண்டி நிலை ஏற்பட்டது. அவ்வகை மோதல்களில் கொல்லப்பட்டவர்களுக்குக் கள்ளர்கள் நடுகல் வைத்து பட்டவன்களாக வழிபடுகின்றனர். கீழக்குயில் குடியில் இவ்வகையில் படைவெட்டுக் காலத்தில் கொல்லப்பட்டவர்களுக்கான நடுகல்கள் அதிகமாக உள்ளது. இவ்வாறாக உள் அரசியில் மோதலில் இறந்தவர்கள், வாலாந்தூர் மற்றும் புத்தூர் இடையே நிதி நீரைப் பகிர்ந்து கொள்வதில் ஏற்பட்ட சண்டையில் இறந்தவர்கள் கள்ளர்கள் தன்னரசு நாடுகளை உருவாக்கியபோது, வரிவசூல் செய்ய முயற்சிதவர்களுடன் ஏற்பட்ட மோதலில் இறந்தவர்கள், ஜல்லிக்கட்டு போன்ற வீர விளையாட்டுக்களில் கொல்லப்பட்டவர்களுக்கும் நடுகல் வைத்து பட்டவன்களாக வழிபடுகின்றனர்.

**சீலைக்காறி அம்மன்:**

சண்டையில் இறந்த ஆண்களை போல் அகால மரணமடைந்த பெண் மூதாதையர்களைச் சீலைக்காரிகள் என்ற பெயரில் வழிபடுகின்றனர். கணவன் வீரமரணமடைந்த

பின் அவனுக்காக சீதைமூட்டி உயிர் துறந்த பெண்கள் கொலை செய்யப்பட்ட பெண்கள், விபத்தில் அகால மரணமடைந்த பெண்கள் ஆகியோரைச் சீலைக்காரிகளாக வழிபடுகின்றனர்.

இவ்வாறு இறந்து போனவர்களை சிதை மூட்டும் பொழுது அவர்களது சேலையின் ஒரு பகுதிமட்டும் வேகவில்லை என்றால், அவற்றை எடுத்து வந்து ஒரு வெட்டியில் வைத்து வழிபடுவதாலும் இதனை சீலைக்காரிகள் என அழைக்கின்றனர். இவை பெரும்பாலும் வீட்டு தெய்வங்களாகவும், வம்சாவரி தெய்வங்களாகவே உள்ளன.

முடிவுரை:

இது போன்ற பழம் பெரும் வரலாற்றைக் கொண்ட கள்ளர் சமூகத்தின் குலதெய்வ வழிபாட்டுமுறை தமிழர் பண்பாட்டு கலாச்சாரத்தில் மிகச்சிறந்த இடத்தை பெற்று இன்னும் போற்றுதல் குரியதாக உள்ளது.

**துணை நூற்பட்டியல்**

1. ஆர்.கே கண்ணன் தேவர்கள் வரலாறு, மதுரை
2. எஸ். சுண்முக சுந்தரம், பசும்பொன் சரித்திரம், காவ்யா, சென்னை 2008.
3. ந.மு. வேங்கடசாமி நாட்டார், கள்ளர் சரித்திரம், சாரதா பதிப்பகம் சென்னை, 2010.
4. இரா. சுந்தரவந்தியத்தேவன், பிறமலைக்கள்ளர் வாழ்வும் வரலாறும், சந்தியா பதிப்பகம், சென்னை 2011.
5. தொ. பரமசிவன், தெய்வங்களும் சமூக மரபுகளும் 1995.

SAMPLE